தை வெள்ளி: மடப்புரம், தாயமங்கலம் கோயில்களில் சிறப்பு வழிபாடு

மானாமதுரை, ஜன. 24: தை மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமையையொட்டி, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள மடப்புரம் காளி கோயில், இளையான்குடி அருகேயுள்ள தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் ஆகியவற்றில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

மடப்புரம் காளி கோயிலில் அதிகாலை நடை திறக்கப்பட்டு அம்மனுக்கு அபிஷேகங்களும், சிறப்பு பூஜைகளும் நடைபெற்றன. பிற்பகலில் கோயிலில் நடைபெற்ற உச்சிகால பூஜையில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர். இவர்கள் நெய் தீபம் ஏற்றியும், எலுமிச்சை மாலை சாத்தியும் காளியம்மனை தரிசித்தனர். இளையான்குடி அருகே உள்ள தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயிலில் மூலவர் மாரியம்மனுக்கு அபிஷேகங்கள் செய்து வெள்ளிக் கவசம் சாத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடைபெற்றன. அப்போது திரளான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று மாரியம்மனை தரிசித்தனர். மேலும், அவர்கள் மாவிளக்கு பூஜை நடத்தியும், நெய் விளக்கேற்றியும் வேண்டுதலை நிறைவேற்றினர்.

இதேபோல, மானாமதுரை ஆனந்தவல்லி சமேத சோமநாதர் சுவாமி கோயில், திருப்புவனம் புஷ்பவனேசுவரர் சமேத சௌந்திரநாயகி அம்மன் கோயில்களிலும் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகை

திருவாடானை, ஜன. 24: நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி சேதம் அடைந்து வருவதைத் தடுக்கும் வகையில், வட்டாணம் கண்மாயில் இருந்து தண்ணீரைத் திறந்துவிடக் கோரி, திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்தை விவசாயிகள் வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டனர்.

திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்தை வெள்ளிக்கிழமை முற்றுகையிட்ட பனஞ்சாயல், புதுக்குடி, நல்கிராமவயல் விவசாயிகள்.

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை அருகேயுள்ள பனஞ்சாயல், புதுக்குடி, நல்கிராமவயல் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 200 ஏக்கர் நிலப் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டு, தற்போது அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ளது. தண்ணீர் வரத்து தொடர்ந்து இருப்பதால், வட்டாணம் கண்மாய் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. இந்தக் கண்மாயைச் சுற்றியுள்ள நிலங்களில் பயிரிடப்பட்ட நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி, அழுகி சேதமடைந்து வருகின்றன.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட பொதுப் பணித் துறை அதிகாரிகளிடம் பல முறை மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லையாம்.

இந்த நிலையில், பாதிப்படைந்த பனஞ்சாயல், புதுக்குடி, நல்கிராமவயல் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்தை வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவலறிந்து வந்த வட்டாட்சியர் அமார்நாத்திடம் வட்டாணம் கண்மாயிலிருந்து தண்ணீரை வெளியேற்ற வலியுறுத்தி விவசாயிகள் மனு அளித்தனர். உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்ததைத் தொடர்ந்து, விவசாயிகள் கலைந்து சென்றனர்.

காரைக்குடியில் வளர் தமிழ் நூலகத்தைப் பார்வையிட்ட சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவினர்

காரைக்குடி/மானாமதுரை, ஜன. 24: சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட வளர் தமிழ் நூலகத்தையும்,கீழடி அருங்காட்சியகத்தையும் சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவினர் வெள்ளிக்கிழமை பார்வையிட்டனர்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக வளாகத்தில் ப. சிதம்பரம் தனது சொந்த நிதியில் கட்டியுள்ள திருமதி லட்சுமி வளர் தமிழ் நூலகத்தை வெள்ளிக்கிழமை பார்வையிட்ட சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுத் தலைவர் கு. செல்வப்பெருந்தகை உள்ளிட்ட குழுவினர்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரத்தின் சொந்த நிதியில் லட்சுமி வளர் தமிழ் நூலகம் கட்டப்பட்டது. இந்த நூலகத்தை சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் கு. செல்வப்பெருந்தகை, குழு உறுப்பினர்களான போளூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, காஞ்சிபுரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், நாகப்பட்டினம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் ஜெ. முகம்மது ஷாநவாஸ், காரைக்குடி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் எஸ். மாங்குடி உள்ளிட்டோர் பார்வையிட்டனர். அப்போது மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் க. ரவி, பதிவாளர் அ. செந்தில்ராஜன், பேராசிரியர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

கீழடி அருங்காட்சியகத்தை பார்வையிட்ட குழுவினர்: கீழடியில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகத்தை சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுத் தலைவர் கு. செல்வப்பெருந்தகை தலைமையிலான குழுவினர் வெள்ளிக்கிழமை பார்வையிட்டனர். அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த அகழாய்வில் கிடைத்த பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய தொன்மையான பொருள்களை அவர்கள் பார்வையிட்டனர். பிறகு, அவர்கள் மதுரைக்கு புறப்பட்டுச் சென்றனர்.

குடியரசுத் தின விழா அணிவகுப்பில் பங்கேற்க அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவிகள் தேர்வு

காரைக்குடி, ஜன. 24: தலைநகர் தில்லியிலும், சென்னையிலும் நடைபெறும் குடியரசுத் தின விழா அணிவகுப்புகளில் பங்கேற்க காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவிகள் 2 பேர் தேர்வாகினர்.

தில்லியில் நடைபெறும் குடியரசு விழா அணிவகுப்பில் பங்கேற்பதற்காக நாடு முழுவதிலுமிருந்து 2,361 தேசிய மாணவர் படை மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில், காரைக்குடியில் உள்ள தமிழ்நாடு ஒன்பதாவது பட்டாலியனைச் சேர்ந்த அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் மூன்றாமாண்டு இளநிலை வரலாறு பயிலும் தேசிய மாணவர் படை மாணவி ஜீவகப்பிரியா தேர்வு செய்யப்பட்டார்.

இதேபோல, மாநில அளவில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெறும் குடியரசுத் தின விழா அணி வகுப்பில் பங்கேற்க இந்தக் கல்லூரியில் மூன்றாமாண்டு இளநிலை வணிகவியல் பயிலும் தேசிய மாணவர் படை மாணவி நிர்மலா தேவி தேர்வு செய்யப்பட்டார்.

இந்த மாணவிகளை கல்லூரியின் முதல்வர் அ. பெத்தாலட்சுமி, கல்லூரியின் தேசிய மாணவர் படை பொறுப்பாளர் சரவணன், பேராசிரியர்கள், பணியாளர்கள் பாராட்டினர்.

சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பேரணி

ராஜபாளையம், ஜன. 24: விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுப் பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முன்னதாக, ராஜபாளையம் நீதிமன்ற வளாகம் முன் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு, உறுதிமொழி, ஏற்றனர். வட்ட சட்டப் பணிகள் குழுத் தலைவரும், சார்பு நீதிபதியுமான சண்முகவேல்ராஜ், குற்றவியல் நீதித்துறை நடுவர் பிரீத்தி பிரசன்னா ஆகியோர் கொடியசைத்துப் பேரணியைத் தொடங்கிவைத்தனர்.

ஊர்க் காவல் படை மதுரை மண்டல துணை தளபதி, ராம்குமார் ராஜா, ஏரியா கமாண்டர் அழகர்ராஜா, வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் செண்பகவள்ளி, காவல் ஆய்வாளர்கள் அசோக்பாபு (வடக்கு), செல்வி (தெற்கு), மரியபாக்கியம் (மகளிர்), போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள், சீமான், வள்ளியம்மாள், வழக்குரைஞர்கள் சங்கத்தினர், வட்ட சட்டப் பணிகள் குழுவினர், காவல் துறையினர், ஊர்க்காவல் படையினர் பேரணியில் கலந்து கொண்டனர். இந்தப் பேரணி பஞ்சு மார்க்கெட், தென்காசி சாலை, காந்தி சிலை வழியாக சென்று ஜவகர் மைதானத்தில் முடிவடைந்தது.

கழிவுநீர்க் கால்வாய், சுத்திகரிப்பு நிலையம் அமைக்க பூமிபூஜை

பரமக்குடி, ஜன. 24: பரமக்குடி-எமனேசுவரம் பகுதியில் வைகை ஆற்றின் கரையோரம் கழிவுநீர்க் கால்வாய், சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பூமிபூஜை வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பரமக்குடியில் கழிவுநீர்க் கால்வாய், சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பூமி பூஜையை வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்த சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன்.

பரமக்குடி பகுதியில் வைகை ஆற்றில் கழிவுநீர்க் கலப்பதைத் தடுக்கும் வகையில், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், ஆற்றின் வலது கரையோரம் காட்டுப் பரமக்குடி பகுதியிலிருந்து காக்காத்தோப்பு வழியாக தண்டிராதேவிபட்டினம் புல்பண்ணை வரையிலும், ஆற்றின் இடது கரையோரம் ஆற்றுப் பாலம் பகுதியிலிருந்து ஜீவாநகர் மயானம் வரையிலும் ரூ 10.43 கோடியில் கழிவுநீர் செல்லும் வகையில் குழாய்கள் அமைக்கப்பட உள்ளன.

மேலும், தண்டிராதேவிபட்டினம் புல்பண்ணை பகுதியில் ரூ.20.05 கோடியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட உள்ளது.

இவற்றுக்கான பூமிபூஜை நகராட்சி அலுவலகத்தின் பின்புறம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பரமக்குடி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன், நகர்மன்றத் தலைவர் சேது.கருணாநிதி, நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சிப் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பட்டாசு ஆலையில் வெடிவிபத்து: பெண் காயம்

சிவகாசி, ஜன.24: சிவகாசி அருகே வெள்ளிக்கிழமை பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் பெண் தொழிலாளி காயமடைந்தார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகேயுள்ள நதிக்குடியில் சங்கர் என்பவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலை உள்ளது. இந்த ஆலையில் வெள்ளிக்கிழமை 150 தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்தனர்.

அப்போது பேன்சி ரக பட்டாசு தயாரிக்கும் அறையில் வேதிப் பொருள்கள் உராய்வு ஏற்பட்டு வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் வெடி சப்தம் கேட்டு ஆலையை வீட்டு வெளியேறினர். இந்த விபத்தில் நதிக்குடியைச் சேர்ந்த தங்கம்மாள் (50) காயமடைந்தார். இவர் சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தகவலறிந்து அங்கு சென்ற சிவகாசி தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர். இதுகுறித்து எம்.புதுப்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ - ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/133/2024-25 தேதி: 23.01.2025

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட், 2/120, அஞ்சல் பெட்டி எண்.7, ரெங்கநாதபுரம் தெரு, தளவாய்புரம், இராஜபாளையம், விருதுநகர், தமிழ்நாடு-626188.
3) திருமதி.R. அமுதா, வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
5) திருமதி.A.மீனா, வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.
7) திருமதி.S.முத்துலட்சுமி, வசிப்பிடம் எண்.1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
9) திருமதி.S.வரலட்சுமி, வசிப்பிடம் எண்.1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
2) திரு.K.S.ரமேஷ், வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
4) திரு.K.S. அன்பழகன், வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.
6) திரு.K.S.செந்தில்குமார், வசிப்பிடம் எண்.1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
8) திரு.K.S.செல்வராஜ், வசிப்பிடம் எண்.1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

தி சௌத் இந்தியன் வங்கி, இராஜபாளையம் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 22.01.2025 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், இராஜபாளையம் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.12,57,17,169.60-ஐ (ரூபாய் பன்னிரண்டு கோடியே ஐம்பத்தேழு லட்சத்து பதினேழாயிரத்து நூற்றி அறுபத்தொன்பது மற்றும் பைசா அறுபது) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 25.02.2025 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்	ஐடம் எண் 1: திரு.K.S.ரமேஷ் ஐடம் எண் 2: திரு.K.S.ரமேஷ் ஐடம் எண் 3: M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்

சொத்து விபரம்:- ஐடம் எண். 1:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A ஆகியவற்றில் அமைந்துள்ள 5567.50 சதுரடி இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், தளவாய்புரம் பஞ்சாயத்து, வார்டு எண்.2-ல், 3340.12 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண். 120, 120R, 120B8, 120B10 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டிடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து, செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற திருத்தப்பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை, தெற்கே: K.S.செந்தில்குமாரின் பங்குக் கட்டிடம், கிழக்கே: 2-வது அட்டவணை கட்டிடம் மற்றும் வடக்கு தெற்கு பொதுச்சுவர், மேற்கே: வடக்கு தெற்கு தெரு.

ஐடம் எண். 2:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A, சர்வே எண். 332/1, தற்போது புதிய S.No. 332/1P ஆகியவற்றில் அமைந்துள்ள 4640 சதுரடி இடத்தின் அனைத்து பகுதிகளுடன், தளவாய்புரம் பஞ்சாயத்து, வார்டு எண்.2-ல், 2156.01 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண். 120B-ஐ கொண்ட குடியிருப்புக் கட்டிடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து, செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற திருத்தப் பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை, தெற்கே: ராமகந்தரராஜபாண்டியர் கிழக்கு மேற்கு தெரு, கிழக்கே: பொது நடைபாதை, மேற்கே: 1-வது அட்டவணை வடக்கு தெற்கு பொதுச்சுவர்.

ஐடம் எண். 3:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, அரசியாபட்டி கிராமத்திற்குட்பட்ட, i) சர்வே எண்.51/3-ல் 101 சென்ட், ii) சர்வே எண்.51/2-ல் 86 சென்ட் மற்றும் சர்வே எண்.50/2-ல் கிணற்றின் 2/5வது வலது முதலியன iii) சர்வே எண்.53-ல் இருக்கும் 6.61 ஏக்கரில் தென்புறமுள்ள 6 சென்ட். iv) சர்வே எண்.52-ல் இருக்கும் 95 சென்ட் இடத்தில் வடக்கிலுள்ள 58 சென்ட் & v) சர்வே எண்.53-ல் இருக்கும் 6.61 ஏக்கரில் வடக்கிலுள்ள 142 சென்ட் என்ற அளவுகளில் அமைந்திருக்கும் 393 சென்ட் (i.e. 101+86+6+58+142 சென்ட்) இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், களங்கப்பேரி பஞ்சாயத்தில் 45137.70 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண்கள். 719, 918, 919, 920, 1334 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டிடத்துடன் அதன் அனைத்து பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான இந்த சொத்து, கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகத்தில் 17.11.1997 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண்.1246/1997 & 20.03.1995 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண்.291/1995 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு:

i) 101 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன, தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து, மேற்கே: ரோடு. ii) 86 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன மற்றும் குருவய்யா நாடாரின் வறண்ட நிலம், தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் கன்னியப்ப நாடாருக்கு சொந்தமான நிலம், கிழக்கே: குருவய்யா நாடாரின் வறண்ட நிலம், மேற்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1வது அட்டவணை சொத்து. iii) 6 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து, தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து, மேற்கே: ரோடு. iv) 58 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம், தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து, மேற்கே: விற்பனைப் பத்திர எண்.291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து. v) 142 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம், தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம், கிழக்கே: கன்னியப்ப நாடார் மற்றும் பிறருடைய நிலம், மேற்கே: மாங்கம்மாள் சாலை.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ஐடம் எண். 1:- ரூ.82,25,000/- (ரூபாய் எண்பத்திரண்டு லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்). ஐடம் எண்.2:- ரூ.87,27,000/- (ரூபாய் எண்பத்தேழு லட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்). ஐடம் எண்.3:- ரூ.4,54,27,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து நான்கு லட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்).
முன் வைப்புத் தொகை (EMD)	ஐடம் எண். 1:- ரூ.8,22,500/- (ரூபாய் எட்டு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து ஐநூறு மட்டும்). ஐடம் எண்.2:- ரூ.8,72,700/- (ரூபாய் எட்டு லட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்). ஐடம் எண்.3:- ரூ.45,42,700/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்).
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	25.02.2025 அன்று 02.00 PM முதல் 03.00 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	(ஐடம் எண் 1 -க்காக) 01.01.1987 முதல் 01.12.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஐடம் எண் 2 -க்காக) 01.01.2019 முதல் 01.05.2024 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஐடம் எண் 3 -க்காக) 01.11.2019 முதல் 08.05.2023 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட் (Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Mobile No. 9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், இராஜபாளையம் கிளையின் மொபைல் எண் 8075045551-ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

அறிவிப்பு

எமது கட்சிக்காரரான சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆலங்குடி, மேலத்தெரு, க.எண்.376/(1) என்ற முகவரியில் வசித்து வரும் **லேட்.சுப்பிரமணியன்** அவர்கள் மனைவி **ஜெகதாம்பாள்** என்பவருக்கு பாத்தியமான தனது கணவர் சுப்பிரமணியன் பெயரில் இருந்த TUBE INVESTMENTS OF INDIA LIMITED & CHOLAMANDALAM FINANCIAL HOLDINGS LIMITED நிறுவன பங்கு சான்றிதழ்கள் எண்.TIL0024429 மற்றும் TIF0024429 ஆகியன கடந்த **03.01.2025**ஆம் தேதியில் திருப்பத்தூர் செல்வதற்காக எடுத்து சென்றபோது மேற்படி எமது கட்சிக்காரரின் முகவரியில் தொலைந்து போய்விட்டது. மேற்படி ஆவணங்களை கிடைக்கப்பெற்றவர்கள் எமது கட்சிக்காரர் வசம் ஒப்படைக்குமாறு வேண்டி இந்த பொது அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

திரு. **S.சேவுகராஜ்**, B.Com. B.L
வழக்கறிஞர், சிவகங்கை

HDFC BANK

ஹெச்.டி.எஃப்.சி பேங்க் லிமிடெட்

கிளை : நெ.406, சக்தி சிவம் பிளாசா, பம்பிங் ஸ்டேஷன் ரோடு, 9-வது கிராஸ், கே.கே.நகர் (கிழக்கு), மதுரை-625020 CIN L65920MH1994PLC080618 Website: www.hdfcbank.com.

சொத்தினை கையகப்படுத்துதல் அறிவிப்பு

2002 - ம் ஆண்டின் செக்யூரடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் 2002 - ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3-ன் கீழ் **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மாண்டமிகு NCLT- மும்பையால் 17 மார்ச் 2023 தேதியிட்ட உத்தரவின்படி முந்தைய ஹெச்.டி.எஃப்.சி லிமிடெட், ஹெச்.டி.எஃப்சி வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஹெச் டி எஃப் சி) நிறுவனத்தால், அதிகாரம் பெற்ற அதிகாரியாக (ஆதரைஸ்டு ஆபீசர்) நியமிக்கப் பட்டவர், கேட்புத் தொகை அறிவிப்பு (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் கீழே விவரிக்கப்பட்டுள்ள கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) - க்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கடன் ஒப்பந்தத்தில் கண்டுள்ள வட்டி விகிதத்தில் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுடன் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார்.

வ. எண்.	கடனாளர் பெயர் (கள்)/ சட்டப்படியான வாரிசு (கள்) சட்டப்படியான பிரதிநிதி (கள்) பெயர்கள்	மொத்த கடன் நிலுவைத் தொகை	கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி	ஈடு பெற்ற சொத்து விபரம் (அசையா சொத்து)
(a)	(b)	(c)	(d)	(e)
1.	கடனாளர் : 1.திரு.ஆண்டவி மாணிக்கம் A/c No:679201080, 680153116, 687267409, 685861454 2. திருமதி.அமலோர்பவ செல்வ ராணி ஆண்டவி, பிளாட் எண்.7B/2, மீனாட்சி அம்மன் நகர், வார்டு A, பிளாக் எண். 20, தேவகோட்டை - 630303.	31 ஜூலை 2024* வரை ரூ.48,84,828/- கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி 18 செப்டம்பர் 2024	22 ஜனவரி 2025 - Symbolic	காரைக்குடி பதிவு மாவட்டம், தேவகோட்